பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மடர் 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆவணி 05 வெள்ளிக்கிழமை 21-08 1992 UTHAYAN — A Lively National Tamil Daily இதழ் 267

குடாநாடு மீதான பெருந்தாக்குதல் நேற்றுக் காலை ஆரம்பம்

# வலி-வடக்கு, வலி-மேற்கு பகுதிகளில் குண்டு வீச்சு! ஷெல் பீரங்கித் தாக்கு!!

## அளவெட்டி, சேந்தாங்குளம் முனைகளில் இராணுவத்துடன் புலிகள் உக்கிர சண்டை

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 21

யாழ். குடாநாடு மீதான ஸ்ரீலங்காப் படைகளின் பெருந்தாக்குதல் நேற்றுக் காலை ஆரம்பமானது. வலிகாமம் வடக்கு, வலிகாமம் மேற்குப் பகுதிகளில் பெருத்த எடுப்பில் குண்டுவீச்சு, ஷெல் மற்றும் பீரங்கித் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

வான், கடல், தரை மார்க்கங்களில் கடும் தாக்குதல்களை நடத்தியவாறு அளவெட்டி, சேந்தாங்குளம் ஆகிய இரு முனைகளில் முன்னேற முயன்ற இராணுவத்துடன் புலிகள் உக்கிரச் சண்டை புரிந்தனர்.

ஸ்ரீலங்காப் படையினரின் இராணுவ நடவடிக்கைகள் நேற்று அதிகாலை 5-30 மணியளவில் ஆரம்பமாகின. அவ்ரோக்கள், பொம்மர்கள், ஹெலிகள் மாறி மாறி வான் தாக்குதலை நடத்த— பலாலிப் பகுதி முகாம்களிலிருந்து நேற்று முழு நாளும் ஓயாது அகோர ஷெல், பீரங்கிக் குண்டுகள் முழங்க— கீரிமலை, மாதகல் திருவடிநிலை கடற்பகுதிகளில் நிலை கொண்டிருந்த பீரங்கிப் படகுகள் தொடர்ந்து பீரங்கிக் குண்டுகளைப் பொழிய—

தெல்லிப்பழை ஊடாக அளவெட்டிப் பகுதிக்கு ஒரு முனையிலும், சேந்தாங்குளம் ஊடாக இளவாலைப் பகுதிக்கு மற்றொரு முனையிலும் படையினர் முன்னேற முயன்றனர்.

இதனையடுத்து அப்பகுதிகளில் விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்காப் படைகளுக்கும் இடையில் உக்கிரச் சமர் மூண்டது.

நேற்று மாலை வரை இச்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## 'பூகம்பம்' நடவடிக்கை

கொழும்பு, ஆக. 21

வட பகுதியில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக நேற்று ஆரம்பிக்கப்பட்ட இராணுவ நடவடிக்கைக்கு ''பூகம்பம்'' (Earth Quake) என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளின் கைவசமுள்ள பகுதிகளைத் தம்வசப்படுத்துவதும், முடிந்தளவு விடுதலைப் புலிகள் போராளிகளைக் கொல்வதுமே தமது தாக்குதலின் நோக்கம் என்று கூட்டுப்படைகள் அலுவலகப் பேச்சாளர் கேர்ணல் சரத்முனசிங்கா கூறினார்.

சென்ற 10 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவிருந்த 'பூகம்பம்' என்ற பெயரிலான இந்த இராணுவ நடவடிக்கை, உயர் தளபதிகள் கொப்பேகடுவ, விமலரத்ன உள்ளிட்ட பத்து அதிகாரிகளின் உயிரிழப்புக் காரணமாக ஒத்திப் போடப்பட்டது.

ஆனால் யாழ்ப்பாணத்தின்

[5 ஆம் பக்கம் பார்க்க]

## தற்போது நடைபெறுவது இறுதிக் கட்ட தாக்குதலாம்

கொழும்பு, ஆக. 21

யாழ். பிராந்தியத்தை கைப்பற்றும் இறுதி முயற்சி எனப்படும் இராணுவத்தின் இறுதித் தாக்குதல் நேற்று ஆரம்பிக்கப்பட்டது என்று வெரித்தாஸ் வானொலி அறிவித்தது.

சீனத்தயாரிப்பான ரி - 55 ரக போர் டாங்கிகள், ரி - 85 எனப்படும் இராணுவ வாகனங்கள், குண்டு பொழியும் ஹெலிக்கொப்டர்கள் என பலவித நவீன ஆயுதங்கள் சகிதம் ஆயிரக்கணக்கான படையினர் நேற்று வடபகுதியில் பாரிய தாக்குதலை ஆரம்பித்தனர்.

விமானப்படை, தரைப்படை என்று முக்கிய படைகளுடன் போரில் இறங்கி இருக்கும் இராணுவம் கடற்படையையும் உஷார் நிலை வைத்திருக்கிறது.

விடுதலைப் புலிகளின் கைவசம் உள்ள சில கடற்கரைப் பகுதிகளைக் கைப்பற்றி, விடுதலைப் புலிகளுக்குப் பொருள்கள் வரும் பாதைகளைத் தடைசெய்வதும், யாழ் நகரைக் கைப்பற்றும் தாக்குதலை நடத்தத் தமக்குத் தேவைப்படும் சில முக்கிய பகுதிகளைக் கைப்பற்றுவதுமே தமது நோக்கமாக

[5 ஆம் பக்கம் பார்க்க]

## இரட்டை நோக்கத்துடன் தாக்குதல் நடக்கின்றது

### பிரட்மன் வீரக்கோன் கூறுகிறார்

கொழும்பு, ஆக. 21

யாழ்ப்பாணக் குடாநாட்டின் மீதான தாக்குதல் இரட்டை நோக்கங்களை உடையது ஒன்று விடுதலைப் புலிகளை பேச்சுவார்த்தை மேசைக்கு வரத் தூண்டுவது இரண்டாவது குடாநாட்டில் மேலும் பல பகுதிகளை அரச படைகளின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது.

ஜனாதிபதியின் ஆலோசகர் திரு பிரட்மன் வீரக்கோன் பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு தெரிவித்தார்.

பெருந்தாக்குதலை மேற்கொள்வது மக்களுக்கு எதிரான உளவியல் போராக அமையுமா என்ற கேள்விக்குத் தக்க பதில் கூறாமல் அவர் சமாளித்துக் கொண்டார்.

'தாக்குதலின் இப்போதைய கட்டத்தில் குடாநாட்டின் கேந்திர நிலையத்தைப் பிடிப்பதற்கு முயற்சிக்கப்படும் என நான் நினைக்கவில்லை — என்றும் அவர் கூறினார்.

லெப். ஜெனரல் கொப்பேகடுவ நினைத்ததுபோன இராணுவ நடவடிக்கை, பேச்சுவார்த்தை ஆகிய இரண்டி

[6 ஆம் பக்கம் பார்க்க]

## அராலிப் பகுதியை நோக்கி அதிகாலை ஷெல் தாக்கு!!

### மக்கள் இடம் பெயர்வு

அராலி, ஆக. 21

நேற்றுக் காலை ஸ்ரீ லங்காப் படையினர் குடாநாட்டின் மீதான இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்தபோது அராலிப் பகுதியை நோக்கி கடும் ஷெல் தாக்குதலை நடத்தினர். ஐம்பது கலிபர் வேட்டுக்களும் கண்டபடி தீர்க்கப்பட்டன.

தீவகப் பகுதியில் நிலை கொண்டுள்ள படையினர் நேற்றுக் காலை ஐந்து மணி முதல் சுமார் முப்பது நிமிட நேரம் நடத்திய கடும் தாக்குதலினால் அராலிப் பகுதியிலிருந்த மக்கள் பெருமளவில் இடம்பெயர்ந்தனர்.

இந்த ஷெல் தாக்குதலி

[5 ஆம் பக்கம் பார்க்க]

## கந்தரோடையில் 7 பேர் காயம்

யாழ்ப்பாணம், ஆக. 21

கீரிமலைப் பகுதியில் இருந்து நேற்றுக் காலை 7 மணியளவில் ஏவப்பட்ட இரு ஷெல்கள் கந்தரோடை வயல் பகுதியில் விழுந்து வெடித்ததில் ஏழுபேர் காயமடைந்தனர்.

காயமடைந்தோர் யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். [உ-3]

## இரத்தம் அவசரம் தேவை

யாழ்ப்பாணம், ஆக. 21

யாழ். ஆஸ்பத்திரி இரத்த வங்கியில் சகல பிரிவு இரத்தங்களுக்கும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

தற்போது ஏற்பட்டுள்ள அவசர நிலையில் நோயாளரை உயிராபத்தில் இருந்து காக்கும் பொருட்டு, பொது மக்களை தாமாகவே முன் வந்து இரத்ததானம் செய்யும்படி இரத்தவங்கி அதிகாரிகள் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளனர். [உ-15]

## இன்று ரதோற்சவம்

குருநகர், ஆக. 21

அளவெட்டி தெற்கு, நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தான ரதோற்சவம் இன்று காலை 9 30 மணிக்கு நடைபெற ஏற்பாடாகி உள்ளது.

காலை 7.30 மணிக்கு சங்காபிஷேகமும், இரவு 7 மணிக்கு உறியடி உற்சவமும் நண்பகல் 12 மணிக்கு மகேசுவர பூசையும் நடைபெறும்.

பிற்பகல் அருட்கவி சீ. விநாசித்தம்பிப் புலவர் எழுதிய ''[illegible]'' நூல் வெளியீட்டு வைபவம் நிகழும்.

[[illegible] 3 ஆம் பக்கத்தில்]

## ஹெலிகள் நோட்டீஸ் மழை!

யாழ்ப்பாணம், ஆக. 21

குடாநாட்டின் குறிப்பிட்ட சில பகுதிகளில் நேற்று ஹெலிக்கொப்டர்களில் இருந்து துண்டுப் பிரசுரங்கள் 'மழை' போல் பொழியப்பட்டன.

தமிழில் மாத்திரம் எழுதப்பட்டிருந்த அந்த நோட்டீஸ் பிரசுரங்களில் மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு குறிப்பிடப்பட்டிருந்தது.

குறிப்பிட்ட சில பாடசாலைகள், கோவில்கள், தேவாலயங்களுக்குச் சென்று தங்கியிருக்குமாறு பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கிடையில் —

ஹெலியில் இருந்து பிரசுரங்கள் போடப்படும் முன்னரே சில இடங்களில் தாக்குதல்கள் ஆரம்பமாகி விட்டன என்றும் —

சில பகுதிகளில் தாக்குதல்கள் நடந்து கொண்டிருந்த சமயம் பிரசுரங்கள் வீசப்பட்டன என்றும் பொதுமக்கள் தெரிவித்தனர். [ஒ-152-154-28-15]

## பெருமளவு மக்கள் இடம் பெயர்வு!

யாழ்ப்பாணம், ஆக. 21

வலி. வடக்கிலும், வலி. மேற்கிலும் மற்றும் பகுதிகளிலும் நேற்று இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளினால் சுமார் ஐம்பதினாயிரம் மக்கள் இடம்பெயர்ந்து அகதிகளாகியிருப்பதாக பூர்வாங்கச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அளவெட்டி, மல்லாகம், இளவாலை, விளான், பன்னாலை, பண்டத்தரிப்பின் ஒரு பகுதி ஆகியவற்றிலிருந்தும் —

அராலிப் பகுதியிலிருந்தும்— பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன.

இடம்பெயர்ந்த மக்கள் குடாநாட்டின் மற்றைய இடங்களில் உள்ள தங்களது உறவினர்கள் வீடுகளிலும் பொது இடங்களிலும் தஞ்சம் புகுந்துள்ளனர்.

[6 ஆம் பக்கம் பார்க்க]

## நேற்றைய சம்பவங்களில் 20 பொதுமக்கள் காயம்

யாழ்ப்பாணம், ஆக. 21

நேற்று யாழ். குடாநாட்டுப் பகுதிகளில் ஸ்ரீலங்காப் படையினர் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகளின் போது இருபதுக்கும் அதிக பொதுமக்கள் காயமடைந்தனர்.

அவர்களில் 18 பேர் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களின் விவரம் வருமாறு:-

மாதகலில் மேற்கொள்ளப்பட்ட பீரங்கித் தாக்குதலின் போது காயமடைந்த— துறைமுகப் பகுதியைச் சேர்ந்த — கீதபொன்கலன் தோமஸ் வித்ரர் (வயது 22), விஜயபாலசிங்கம் தேவாமிர்தம் (வயது 49).

பலாலியில் இருந்து மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலில் தெல்லிப்பழை மாத்தனைப் பகுதியில் காயமுற்ற கந்தசாமி சண்முகநாதன் (வயது 27), நடேசன் தயாபரன் (வயது 16), அளவெட்டி வடக்குப் பகுதியில் காயமுற்ற தெய்வசிகாமணி பாமினி (வயது 16), சுன்னாகம் கந்தரோடைப்பகுதியில் காயமுற்ற ஞானப்பிரகாசம் அல்பிரட் (வயது 55), கதிரேசன் சாந்தி

[5 ஆம் பக்கம் பார்க்க]

## மாலை விமானத் தாக்குதலில் இளவாலையில் ஒருவர் பலி!

இளவாலை, ஆக. 21

உயரப்புலம், விளான், மாதகல் பகுதிகளில் நேற்று மாலை இடம்பெற்ற விமானத் தாக்குதல்களில் ஒருவர் பலியானார்.

குரும்பசிட்டியிலிருந்து இடம்பெயர்ந்து உயரப்புலத்தில் தங்கியிருந்த தவசி சந்திரன் (வயது 55) என்பவரே இறந்தவர் ஆவார்.

மூன்று குண்டுவீச்சு விமானங்கள் இத்தாக்குதலில் ஈடுபட்டன.

## குடாக் கடலுக்குச் செல்ல வேண்டாம் என அறிவிப்பு

குடாக்கடல் பிரதேசத்தினுள் மீனவர்களை மறு அறிவித்தல் வரை தொழிலுக்குச் செல்ல வேண்டாம் என நேற்று ஒலிபெருக்கி மூலம் விடுதலைப் புலிகள் கேட்டுள்ளனர்.

கடலில் கைதாகும் மீனவர்களைக் கேடயமாகப் பயன்படுத்தி ஸ்ரீலங்கா இராணுவத்தினர் யாழ்ப்பாணப் பகுதிக்குள் பிரவேசிக்கும் திட்டம் ஒன்றை தீட்டி இருப்பதாகவும் மேற்படி அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டது. [ஒ-51]

வனம் பேணிட
கவனம் செலுத்துவோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டு - உள்நாட்டு செய்தியாளர் வெளிநடப்பு

கொழும்பு, ஆக. 21

அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் நேற்று நடத்தப்பட்ட வாராந்த செய்தியாளர் மாநாட்டிலிருந்து சுமார் 20 வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுப் பத்திரிகையாளர்கள் வெளிநடப்புச் செய்தனர்.

அண்மையில் செய்தியாளர்கள் தாக்கப்பட்ட சம்பவங்கள் பற்றி கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அமைச்சரவைப் பேச்சாளர் திரு. ரணில் விக்கிரமசிங்க அளித்த பதில்களைத் தொடர்ந்தே அவர்கள் வெளிநடப்புச் செய்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

எதிர்க்கட்சியினர் நடத்திய ஆர்ப்பாட்டங்கள் பற்றிய செய்திகளை சேகரித்துக் கொண்டிருந்த செய்தியாளர்கள் அண்மையில் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பான பொலிஸ் அறிக்கை ஒன்றை மாநாட்டில் வைத்து திரு. ரணில் விக்கிரமசிங்க வாசித்தார்.

கோட்டை ரயில் நிலையப் பகுதியில் நடந்த அந்தச் சம்பவம் பற்றிப் பொலிஸார் விசாரணை நடத்திய விதமும் —

அந்தச் சம்பவம் பற்றி பிரதமர் விஜேதுங்க நாடாளுமன்றத்தில் வெளியிட்ட கருத்துக்களும் தமக்குத் திருப்தி தரவில்லை எனப் பத்திரிகையாளர்கள் கூறியே வெளிநடப்புச் செய்தனர். [இ-5]

## நல்லூரில் இன்று

யாழ்ப்பாணம், ஆக. 21

நல்லூர் கந்தசுவாமி கோவில் உற்சவகாலத்தை முன்னிட்டு ஆலயச் சுற்றாடலில் — 19 ஆம் திருவிழாவான (கார்த்திகை திருவிழா) — இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள நிகழ்ச்சிகள் வருமாறு:

★ கிழக்கு வாசல் முருகன் தண்ணீர்ப்பந்தலில் (மாலையில்) — ஆர். ராதாகிருஷ்ணன் குழுவினரின் ''வயலின் சோலோ'' இசைக்கச்சேரி

★ மேற்கு வீதியில் பிள்ளையார் ஆலய முன்றலில் (மாலையில்) — கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ வை. நித்தியானந்த சர்மா நிகழ்த்தும் ''அக்கினிமுகா சூரன் போர்'' என்ற பொருளில் கந்தபுராண கதாப் பிரசங்கம்.

★ நல்லை ஆதீனத்தில் பிற்பகல் 2.00 மணிக்கு — கந்தபுராணப்படிப்பு, பிற்பகல் 3.00 மணிக்கு பௌராணிகர் மு. தியாகராசாவின் ''முருக இலக்கியங்கள்'' தொடர் விரிவுரை. [ஒ-30]

## ஹெலி சூடு

யாழ்ப்பாணம், ஆக. 21

யாழ்ப்பாணம், கடலேரிப் பகுதியை நேற்று மாலை 5 மணியளவில் வட்டமிட்ட ஹெலி ஒன்று, சரமாரியான வேட்டுக்களைத் தீர்த்தது. [ஒ-15]

## இன்று

யாழ்ப்பாணம், ஆக. 21

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் 26 ஆவது ஆண்டு பீடாரோகண விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 5 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். பிற்பகல் 2 மணிக்கு கந்தபுராண நூல் வெளியீடும் இடம்பெறும். [த]

★ ★ ★

யாழ்ப்பாணம், ஆக. 21

உரையாசிரியர் பின்னைக்கவி வ. சிவராஜசிங்கத்தின் கந்தபுராணம் — சூரபன்மன் வதைப்படலம் தெளிவுரை நூல் வெளியீட்டு விழா இன்று பிற்பகல் 2 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறும். [த]

## உற்சவங்கள்

மயிலணி, ஆக. 21

சுன்னாகம் தெற்கு கிவபூதராயர் கோயில் வருடாந்த அலங்கார உற்சவம் இன்று பிற்பகல் 3மணிக்கு ஆரம்பமாகி எதிர்வரும் 30 ஆம் திகதி வரை நடைபெறும். [த-89-15]

★ ★ ★

தென்மராட்சி, ஆக. 21

சாவகச்சேரி சப்பச்சிமாவடி ஆழ்வார் ஆலய கிருஷ்ண ஜயந்தி விழா இன்று காலை 6 மணி தொடக்கம் நாளை சனிக்கிழமை காலை ஆறு மணி வரை நடைபெறவுள்ளது. [ஒ-117]

## கிறிஸ்தவ சேவ ஆச்சிரம ஆண்டு விழா

யாழ்ப்பாணம், ஆக. 21

மருதனார்மடம் கிறிஸ்த சேவ ஆச்சிரமத்தின் 53 ஆவது ஆண்டு விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 7-00 மணிக்கு பரிசுத்த நற்கருணை ஆராதனையுடன் ஆரம்பமாகிறது.

பிற்பகல் 3-30 மணிக்கு நடைபெறும். பகிரங்கக் கூட்டத்துடன் விழா நிறைவு பெறும். [இ]

## புதிய இந்தியத் தூதுவர்: ஜாவின் இடத்துக்கு தயாள்

இலங்கைக்கான இந்தியத் தூதுவராக திரு ராமேஷ்வர் தயாள் நியமிக்கப்படவிருக்கிறார் என்று அறிவிக்கப்படுகிறது.

தற்போது கொழும்பில் தூதுவராகப் பணிபுரியும் நாகேந்திரநாத்ஜாவின் இடத்துக்கு இவர் நியமிக்கப்படுவார்.

இதற்கிடையில் — சைப்பிரஸ் நாட்டுக்கான இந்தியத் தூதராக திரு. ஜி. பார்த்தசாரதி நியமிக்கப்பட்டுள்ளார். [உ-எ]

## மாட்டு வண்டிச்சவாரி ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஆக. 21

ஆவரங்கால் விவசாயிகள் நாளை சனிக்கிழமை ஆவரங்கால் சவாரித்திடலில் நடத்த இருந்த மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. [த]


NEW SCIENCE ACADEMY
JAFFNA.

★ தாவரவியல் ★
(வார இறுதி வகுப்புக்கள்)
திரு. வி. எஸ். குணசீலன்
புதிய பகுதிகள் ஆரம்பம்:
22 - 08 - 1992 [சனி]
93 (A/L) - உடற்றொழிலியல் 6-00 — 7-00 a.m.
94 (A/L) - உருவவியல் 12-00 — 1-00 p.m.
(ஆரம்ப வகுப்பின் பின் அனுமதிகள் இல்லை) (சி-3156)


## கண்ணீர் அஞ்சலி

திருமதி சரஸ்வதி சோமசுந்தரம்

(ஓய்வுபெற்ற ஆசிரியை, யா/ வண் நாவலர் மகா வித்தியாலயம்.)

இறைவனடி சேர்ந்த திருமதி சரஸ்வதி சோமசுந்தரம் அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்கி, அவரது பிரிவால் துயருற்றிருக்கும் கணவர், பிள்ளைகள், உறவினர்கள் அனைவருக்கும் எமது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அதிபர், ஆசிரியர்கள்.


யாழ்/ வண். நாவலர் மகா வித்தியாலயம்,
யாழ்ப்பாணம். [22250]


SHAMROCK
யாழ். சுண்டுக்குளி.
93 — PURE / APP.
திரு. P. கமலசிங்கம்
B.Sc (Hons)
நுண்கணிதம்
எறியம்
சனி, ஞாயிறு 2-00—4-00
(22248)



அரிய சந்தர்ப்பம் ——> தவறவிடாதீர்கள்
2வது பிரிவும் ஆரம்பமாகிவிட்டது
எழுதுவினைஞர் சேவை
போட்டிப் பரீட்சைக்கான
விசேட பயிற்சி வகுப்புகள்
★ சனி, ஞாயிறு விடுமுறை தினங்களில் பி. ப. 2—5 மணி வரை
★ இலவச பாடக்குறிப்புகள்
★ கட்டணம் ரூபா 300/- (முழுப் பயிற்சிக்கும்)
★ குறிக்கப்பட்ட மாணவர்களுக்கே இடமுண்டு ★
ASTAN INSTITUTE
101/10, STANLEY ROAD, JAFFNA
(மக்கள் வங்கிக்கு அருகாமையில்) [கி-3158]


# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி







**கதிர்காமத்தம்பி இரவீந்திரதாஸ்**
படைப்பு:- 14-01-1958

**கதிர்காமத்தம்பி இராதாகிருஷ்ணன்**
படைப்பு:- 22-03-1962
அழிப்பு:- 21-08-1989

**நாகமணி தில்லைநாதன்**
படைப்பு:- 30-03-1959

**திதி: 16-09-1992**

எம் வாழ்க்கை வானத்து மூன்று வளர்பிறைகள்
பூரண சந்திரராய்ப் பொலிவுறும நாள் காத்திருக்க - நீர்
மூன்றாம் பிறையாகி மூன்றாண்டு கழிந்தாலும்
எம் கண்ணீர்க் கசிவுகள் காலத்தால் மாறிடுமோ?

உங்களது ஆத்மா உய்திபெற அஞ்சலித்து நிற்கும்!

- குடும்பத்தினர்.

"வத்தளை",
புலோலி மேற்கு, பருத்தித்துறை. [22157]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அளவெட்டி தெற்கு, நாகேஸ்வரம் ஸ்ரீநாகவரத நாராயணர்

# ★ ஆலய ரதோற்சவ மலர் ★


(21 - 08 - 1992)

## 200 ஆண்டுகளுக்கு முந்திய பழைமை வாய்ந்த தலம்

இறைவன் பஞ்சபூத வடிவில் ஆங்காங்கே — தான் தோன்றி மூர்த்தியாக — கோவில் கொண்டிருக்கிறான். மனிதர் — தேவர் — மிருகம் — பறவை — ஊர்வன — இவற்றால் பூசிக்கப்பட்ட திருத் தலங்கள் பற்பலவாகும்; எங்கும் நிறைந்த இறைவன், தம்மடியார்களுக்காக வெவ்வேறு இடங்களில், வெவ்வேறு வடிவில் கோயில் கொண்டான். ''தொழுவார்க் கிரங்கி இருந்தார் செய்திருப் பாதிரியூர்'' என்று அப்பர் சுவாமிகள் பாடுகிறார் — இந்த வகையில் மலர்ந்த திருத் தலமே ஸ்ரீ நாகவரத நாராயணர் கோவிலாகும்.

### வரலாறு

சுமார் 200 ஆண்டுகளுக்கு முந்திய பழைமை வாய்ந்தது இத் தலம். பற்றைக் காடாகக் கிடந்த இப் பகுதிக்கூடாக பெரிய நடை பாதை இருந்தது கிராம மக்கள் இந்த நடைபாதைக்கூடாகப் போக்குவரத்துச் செய்வர்.



வாகை, நுணா, விளாத்தி ஆகிய 3 மரங்களுக்கிடையே புற்றுப் புதர் இருந்தது. இது வழிக்கரையோரத்தில் இருந்தது. அந்த இடத்தில் இரு பாம்புகள் படமெடுத்துக் காட்சி காட்டின. சில தருணங்களில் இப் பாம்புகளுக்கருகே ஒரு சிறு பையனும் தோன்றுவான். இக் காட்சிகளைக் கண்ட வழிப்போக்கரும், ஊர் மக்களும் நாகதம்பிரான் எனப் பெயரிட்டு அவ்விடத்தில் ஒரு கல்லை வைத்துப் பொங்கல், பூசை செய்து வந்தனர். ஆண்டுப் பொங்கல் ஆவணி ரோகிணியில் நடக்கும் — அந்த நாளே கிருஷ்ண ஜெயந்தியாகும். பொங்கல் வேளையில் இரு பாம்புகளும் நேரே தோன்றி மறையும் என்பது ஐதீகம்.

இத் தலம் 1953 தொடக்கம் வளரத் தொடங்கியது. 1979 இல் தற்போது காணப்படும் கோவிலாகக் கும்பாபிஷேகம் நிகழ்ந்தது. ஆயிரக் கணக்கான மக்கள் குருவாரங்களில் எம்பெருமானைப் போற்றி வழிபாடாற்றுவர். எம்பெருமானின் திருவாக்குப்படியே நாகவரத நாராயணர் என்னும் பெயரால் அவரை அழைக்கிறோம்.

இறந்த பாலன் உயிர் பெற்றமை, மலடி என்று ஏளனம் செய்யப்பட்ட பெண் தற்கொலைக்குத் துணிந்த வேளை அவளைத் தடுத்தாட்கொண்டு சந்தானம் கொடுத்தமை, கண் ஒளிபெறச் செய்தமை, புற்றுநோய் நீக்கியமை, நீலமலர் பூத்த மந்தாரை மரம் வெள்ளை மலர் பூக்கச் செய்தமை இத்தகைய பற்பல அற்புத மூர்த்தியாகிய ஸ்ரீ நாகவரத நாராயணர் இன்று தங்கரதமேறி வீதிவலம் வருகிறார்.

விழாக் காலங்களில் தொடர்ச்சியாக அன்பர் இரு சிவமகாலிங்கம் அவர்களின் திருமுறைச் சொற்பொழிவால் பக்குவமனத்தவராயிருக்கும் அடியார்கள், எம்பெருமானைக் கண்ணீர் மல்க, வாய் குழற, சரீரம் புளகாங்கிதம் கொள்ள 'நாராயணா', 'கோவிந்தா', 'பரந்தாமா' என அழைத்து வழிபாடியற்றும் காட்சி உள்

(5 ஆம் பக்கம் பார்க்க)

### அருட்கவி
### சி. விநாசித்தம்பி
### (ஆலய பரிபாலகர்)

## தேரிலே பகவத்கீதை தந்தோன் இன்று தேரேறி பவனி வருகின்றான்

ஸ்ரீ கிருஷ்ணனும் அர்ஜுனனும் போர்க்களத்திற்கு வருகிறார்கள். பகவான் தேர் ஓட்டுகிறார். பார்த்தன் போருக்கு ஆயத்தமாக வருகிறான். யாரை எதிர்த்து எதற்கைய போர் புரிந்தாக வேண்டும் என்ற நிலை இப்பொழுது தான் அர்ஜுனனுக்குத் திடீரென விளங்குகிறது. எட்ட எறிகின்றான் அம்பையும் வில்லையும் ''வேண்டாம் இவ்வெம் போர்'' என்று விளம்புகிறான். செயல் அற்று சும்மா உட்கார்ந்து விடுகின்றான். இந்நிலையில் தான் ''தேரிலே பகவத்கீதை தந்தான்'' பகவான்.

வாழ்க்கையில் இது ஒருபெரிய முரண்பாடாகத் தென்படுகின்றது. வினைப்பயனை விரும்பாது யாரும் வினை ஆற்ற முடியாது. வினைப்பயனை விரும்பாதார் வினையாற்ற வேண்டிய அவசியமில்லை. ஆனால் பகவானோ இதற்கு நேர்மாறாக உபதேசிக்கிறார். கருமம் புரியாது வெறுமனே இருக்க வேண்டாம். ஓயாது பெரு வினை ஆற்றிக்கொண்டிரு. வினையினின்று விளையும் பலன் யாது என்ற ஏக்கம் உனக்கு வேண்டாம். அத்தகைய பற்றற்ற பாங்கினின்று தான் நன்மை விளையும். ஏனென்றால் கருமம் தன்னளவில் கொடியதன்று ஆசையோடு கூடிய கருமமே கொடியது. பிறவிப் பெருங்கடலில் அது மனிதனை ஆழ்த்துகிறது. சுவர்க்காதி போகங்களை விரும்பி வினையாற்றியவர்கள் எல்லாம் ஆசைக்கு அடிமைப்பட்டவர்களே. வினைப்பயனை விரும்பாதவர்கள் எல்லாம் ஆசையை வென்றவர்களே. ஆசையை வெல்லுமளவு மனிதன் சுதந்திரத்தில் நிலைபெறுகிறான். இந்த வகையில் எத்தனையோ மாவீரச் செல்வங்களை இன்று நாம் காண்கின்றோம். அவர்களால் வாழ்கின்றோம்.

அடியார்கள் அனைவரும் வாருங்கள் ''தேரிலே பகவத்கீதை தந்தவன்'' அளவை தெற்கு நாகேஸ்வரத்தில் இன்று தங்கத்தேரிலே பவனி வருகின்றான். இன்றைய தினம் தேவஸ்தான வெளியீடாகிய ''கீதோபதேசம்'' என்ற நூல் வெளி வருகின்றது அனைவரும் வந்து கீதோபதேசம் பெற்று பகவத் பெறுமாறு உளமார வாழ்த்துகிறேன்.

ஆலய மஹோற்சவ பிரதமகுரு
Dr. வீரசைவ சிவத்திரு கி. உருத்திரபுரேஸ்வரக் குருக்கள்

## விடிவு காலம் விரைவில் கிட்டும்

நரர்களாகிய மக்களுக்கு அதிபதியாகத் திகழ்பவர் நாராயணன். உலகில் வாழும் மக்களைக் காத்து அருள் செய்யும் காத்தல் தெய்வமாகிய நாராயணன் அளவெட்டி நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானத்திலிருந்து தன்னை வழிபடவரும் அடியார்கள் அனைவருக்கும் அருட்கடாட்சத்தை அள்ளி வழங்குகிறார்.

நல்லைக் கந்தன் ஆலயத்தில் தொடர் சொற்பொழிவு ஆற்றியதால் 'அருட்கவி' என்ற பட்டப் பெயரைப் பெற்ற அருளாளர் திரு. சி. விநாசித்தம்பி அவர்களின் அயரா உழைப்பினால் மஹோற்சவம் நடைபெற்று தேரோடும் பெருங் கோயிலாக நாகேஸ்வரம் இன்று வளர்ச்சி பெற்றிருக்கிறது.

தர்மம் அழிந்து அதர்மம் மேலெழுகிற பொழுது என்னை நான் பிறப்பித்துக் கொள்கிறேன் என்பது கீதையில் கிருஷ்ண பரமாத்மாவின் வாக்காகும். [''பரித்ராணாய ஸாதூனாம் விநாசாய சாதுஷ்க்ருதாம் தர்மஸம்ஸ் தாபனார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே'' — கீதை] நமது ஞான பூமியிலே இன்று நாம் அனைவரும் படுகின்ற அவலங்கள், துன்பங்கள் நீங்கி, நிம்மதியாக வாழ்வதற்கு கண்ணபிரானின் அருட்கடாட்சம் நமக்கு அவசியம் தேவையாக இருக்கிறது பக்தர்கள் அனைவரும் பக்தி சிரத்தையோடு ஒருமித்த குரலில் கண்ணனிடம் சரணடைவோமானால் மகிழ்ச்சியான மலர்ந்த வாழ்வு நமக்கு மிக விரைவில் கிடைத்தே தீரும்.

பக்தர்களாகிய நாம் இறைவனை பக்தி சிரத்தையோடு சிக்கெனப் பிடித்தல் வேண்டும். நமது பக்தி தூய பக்தியாக பிரபக்தியாக பரிணமிக்குமானால், கண்ணபிரானின் அபய கரம் நம்மை நோக்கித் திரும்பும் காந்தம் இரும்புத் துகள்களை இழுப்பது போலவும், ஆற்றின் பிரவாகம் கடலை நோக்கி ஓடுவது போலவும் படர்கொடி மரத்தைப் படருவது போலவும் பக்தனது அன்புப் பிரவாகம் இறைவனை நோக்கி ஓடிக் கொண்டேயிருக்கும்.

''பக்தி வலையில்
படுவோன் காண்க''

என்றே நமது தெய்வீக நூல்களும் கூறுகின்றன. கலி

(5 ஆம் பக்கம் பார்க்க)

### சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம்
விரிவுரையாளர், பலாலி ஆசிரிய கலாசாலை

## அடியேங்கள் அவலநிலை தீர்க்கொணாதோ!

குண்டலமசைந்தாடக் குவிந்தசடை முடியாட
குளிர்துளப மாலையாட
கொண்டைபூத்த சாமரச் செங்கமல வாயாட
குங்குமக் கன்களாட
தண்டுவில் திகிரிசங் காடமணிக் கழலாட
தத்தபட் டாடையாட
தாமரைச் செல்வியும் பூமிமகட் செல்வியும்
தங்கிவலத் திடத்திலாட
அண்டங்க ளத்தனையும் ஆடியருள் பாலிக்கும்
அரங்கனே வேங்கடேசா
ஐவருக் குத்தூது சென்றவா அடியேங்கள்
அவலநிலை தீர்க்கொணாதோ
மண்டுதுன் பத்துற்ற மக்களைப் பாராத
மாதாபி தாவு முளரோ
வருகிருஷ்ண ஜயந்தியில் தேரேறி வரும்நாக
வரதநா ராயணமூர்த்தியே!

— ''[illegible]''

மலர் தயாரிப்பு:
ப. கதாகரன்


நாகவரதர் நாற்புரவித் தேரோடி வர இறைஞ்சுகிறோம்!

**சீமாட்டி**
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

**விநாயகர் களஞ்சியம்**
166, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

**யோகாஸ் ஆடை அகம்**
பெரியகடை,
யாழ்ப்பாணம்.

**விக்கினேஸ் ரெக்ஸ்**
45, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

**லிங்கம் கூல்பார்**
52, வெலிங்டன் சந்தி,
யாழ்ப்பாணம்.

**பி. ஐ. பர்னான்டோ**
542, ஆஸ்பத்திரி வீதி,
(யாழ். அரசினர் வைத்தியசாலை முன்)
யாழ்ப்பாணம்.

**அசோகா ஆபரண மாளிகை**
275, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**ராஜா ரேட் சென்ரர்**
3, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

**அருணா ஆபரண மாளிகை**
A J 177/B,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**சோபனா நகை மாளிகை**
116V, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.



நாகவரதர் நாற்புரவித் தேரோடி வர இறைஞ்சுகிறோம்!

**ந. த. இராசரத்தினம்**
1, 2, நவீன சந்தை,
சங்கானை.

**கி. றெஜின் டொனால்ட்**
40, கடற்கரை வீதி,
குருநகர்.

**வசந்தி எலெக்றிக்கல்ஸ்**
110, கே.கே.எஸ். வீதி,
சுன்னாகம்.

**மங்கை சில்க்ஸ்**
8, மத்திய சந்தை,
சுன்னாகம்.

**கே. கே. ஏ.- கந்தையாபிள்ளை**
316, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

**மகாராணி ரெக்ஸ்ரைல்ஸ்**
50, பெரிய கடை,
யாழ்ப்பாணம்

**கே. எஸ். ஆர். போட்டோஸ்**
766, கே. கே. எஸ். வீதி,
தட்டாதெருச் சந்தி.

**கணேஸ் பவான்**
[மருதடி விநாயக ஆலய அருகாமை]
மானிப்பாய்.

அளவை அமர்ந்தருள் பாலிக்கும் அண்ணல் நாராயணன் தேரூர்க!

- கண்ணனடியான்

[விளம்பர இல: இ-3063]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தோத்திரத்திரட்டு

நல்லைக் கந்தன் ஆலய முகப்புடன் தினசரி வழிபாட்டு தோத்திரத்திரட்டு விலை ரூபா 20/-. திருவிழாக்கால மலிவு விற்பனையாக ரூபா 15/-. நல்லை ஆதீனத்திலுள்ள அஷ்டலக்ஷ்மி புத்தகசாலையில் கிடைக்கும்.
(5265-A)

## தேவை

சமூக சேவையில் நாட்டமுள்ள, தங்கிப் பணி புரியக்கூடிய உதவி மேற்பார்வையாளர் தேவை. 45 வயதுக்கு மேற்பட்ட உடல் நலமுடைய ஆண்/பெண் இருபாலாரும் 15-09-92க்கு முன் விண்ணப்பிக்கவும் இருப்பிட, உணவு வசதிகளுடன் ஊக்குவிப்பு வேதனம் பேசித் தீர்க்கப்படும். இல. 856, மே/பா உதயன்.
(5259)

## புலமைப்பரிசில் பரீட்சை

எம்மால் வாரந்தோறும் வெளியிடப்படும் ஆண்டு - 5 புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்களும், அரசாங்கம் நடத்திய இறுதிப் பரீட்சை வினாத்தாள்களும் விடைகளுடன் விற்பனையாகின்றன. Bond Book Stall, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(5237)

எமது நிறுவனத்தால் வாரந்தோறும் வெளியிடப்பட்ட புலமைப் பரிசில் மாதிரி வினாத்தாள்களை இங்கு பெற்றுக் கொள்ளலாம். தொகையாகப் பெற்றுக் கொள்வோருக்கும், கல்வி நிலையங்களுக்கும், பாடசாலைகளுக்கும் விஷேட கழிவு உண்டு. புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(22223)

## A/L மாணவர்களுக்கு

இந்து நாகரிகம் இதழ்—6 வெளிவந்து விற்பனையாகிறது. ஆக்கம்: க. சி. குலரத்தினம். பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
(சி-3138)

## சோதிடம்

கல்வியில் சித்தியா, உத்தியோகம் கிடைக்குமா, வியாபாரம் சிறக்குமா, விவாகம் நடைபெறுமா ஜாதகக் குறிப்பு எழுதிப் பலன் அறியவும், கைரேகை, எண் சோதிடம், விவாகப் பொருத்தம் பார்க்கவும் தொடர்பு: தினமும் காலை 8 முதல் 12 வரை து: சிவானந்தன், பிரபல சோதிடர் ஆனந்தா சோதிட நிலையம், 384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு, கிளை: 249, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தினமும் பிற்பகல் 3 முதல் 6 வரை.
(22175)

## தவறிவிட்டது

சின்னத்தம்பி சிவயோகராசா என்பவரது அடையாள அட்டையும், உணவு முத்திரையும், சிவயோகராசா குகநாதனின் உணவு முத்திரையும் மாமுனையில் 11-8-92 இல் தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் பளை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் ஒப்படைக்கவும்.
(22231)

விற்பனையாகின்றன!

**O/L**

எல்லாப் பாடங்களும் வினாத்தாள்கள்—விடைகளுடன்.

**BOND**

புத்தக நிலையம், 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(சி-3148)

# NEW SCIENCE ACADEMY

JAFFNA.

## 93 A/L PAPER CLASS

★ ஆரம்பமாகி விட்டது ★

SAT. & SUN.

| | | |
|---|---|---|
| PHY. | — சோதிலிங்கம் | — 6-00— 7-00 |
| CHE. | — சண் | — 9-00—10-00 |
| ZOO. | — ஸ்ரீகரன் | — 12-00— 1-00 |
| BOT. | — குணசீலன் | — 1-00— 2-00 |
| PHY. | — கணேசன் | — 2-00— 3-00 |
| CHE | — மணியம் | — 3-00— 4-00 |
| PU /APP. | — குணசிங்கம் | — 4-00— 6-00 |

(சி-3157)

# அறிவித்தல்

சகல வசதிகளும் கொண்ட வீடு நீர்வேலி அரசகேசரி பிள்ளையார் கோவிலடியில் உள்ளது: மச்சம் மாமிசம் குடிவகையற்ற ஒரு சிறு குடும்பம் எதிர்பார்க்கப்படுகிறது. பல்கலைக்கழகம் அல்லது ஆசிரியர் கலாசாலையில் படிக்கும் மாணவிகள் எத்தனை பேரானாலும் இருக்கலாம். சகல வசதிகளும் செய்து தரப்படும். கடித மூலம் தொடர்பு கொள்ளலாம். கொழும்பு போவதால் 01 - 09 - 1992 இன் பின் நேரில் சந்திக்கலாம்.

க. ஏரம்பமூர்த்தி,
நீர்வேலி மத்தி,
நீர்வேலி.

(5263)

# 2ஆவது பிறந்ததின வாழ்த்து



## செல்வி ஷாகீர்த்தியா (ஷாகி)

(21-08-1992)

ஸ்ரீஜெயலிங்கம் - ரஞ்சிதமலர் தம்பதிகளின் செல்வப் புதல்வி ஷாகீர்த்தியா இன்று தனது இரண்டாவது பிறந்தநாளை கரணவாயிலுள்ள தனது இல்லத்தில் கொண்டாடுகின்றார்.

இவரை கனடாவிலுள்ள அப்பா, அம்மா, அண்ணா கபில், அம்மம்மாமார், தாத்தாமார், அப்பம்மா, பூட்டி, பெரியப்பா குடும்பங்கள், சுவிஸ் சித்தி, ஷாலினி, சுவிஸ் மாமாமார், மாலிச் சித்தி, சுபா சித்தி, மட்டக்களப்பு தாத்தா குடும்பம், மலேசியா அம்மம்மா குடும்பம், அச்சுவேலியிலுள்ள உறவினர்கள், நவக்கிரியிலுள்ள உறவினர்கள், கரணவாயில் உள்ள உறவினர்கள், வேதாரணியேஸ்வர வித்தியாலய அதிபர், ஆசிரியர், மாணவர்கள். உற்றார், உறவினர், நண்பர்கள் சகல செல்வமும் பெற்று, பல்கலையும் கற்று, பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றார்கள்.

கோணந்தோட்டம்,
கரணவாய் தெற்கு, கரவெட்டி.
(22177)

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 16 — 11 — 1907



உதிர்வு: 21 — 08 — 1990

## வ. யோசப் பிரான்சிஸ்

(ஓய்வுபெற்ற சிறைச்சாலை அதிகாரி)

அன்பின் திருவுருவே! ஆலயத்தின் பொன்விளக்கே!
என்றும் எமக்காக இதயத்தைத் தந்தவரே!
இன்சொலால் யாவரையும் இனிதாக வென்றவரே!
ஊருக்காய் வாழ்ந்து உபகாரி யானவரே!
ஊனாய் உணர்வாய் உறவாகி உள்ளத்தே,
தேனாய் இனித்த எங்கள் தெய்வமே! உன்பிரிவால்
வாடுகின்ற நாங்கள் வணங்குகிறோம் கர்த்தாவை,
நீடு சுகம் யேசுபிரான் நிழலிலே பெற்றிடுக!

இவரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக இன்று (21-08-92) வெள்ளிக்கிழமை காலை 6-15 மணிக்கு யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இவரின் பிரிவால் துயருறும்;
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

இல. 5, புதிய வீடமைப்புத்திட்டம்,
குருநகர், யாழ்ப்பாணம்.
(22244)

# ஓராண்டு நிறைவு

யாழ்ப்பாணம் ப. நோ. கூ. சங்கத்தின்

★ யாழமுதம் ★

"உழைப்போர் உணவகம்"

நாளை 22-08-1992 சனிக்கிழமை

## தனது ஓராண்டு

தன்னிகரற்ற சேவையைப் பூர்த்தி செய்கிறது

★ எமது புதிய முயற்சிக்கு ★

ஆதரவளித்த அனைவருக்கும் நன்றி.

தொடர்ந்தும்

தரமான உணவு வகைகளை நியாய விலையில் வழங்க

# ★ யாழமுதம் ★

தயாராகவுள்ளது

22-08-1992 சனிக்கிழமை அன்று

தேநீர், கோப்பி, சிற்றூண்டி வகைகள்

அனைத்தும்

மலிவு விலையில் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

## அனைவரும் வருக!

தலைவர்,
பணிப்பாளர்கள், பணியாளர்கள்.

யாழமுதம்.
யாழ்ப்பாணம் ப. நோ. கூ. சங்கம் -
வரையறுக்கப்பட்டது.
20-08-1992.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### இன்றைய கேள்வி

வடக்கில் நான்கு நகரங்களைக் கைப்பற்றுவதற்காக, நான்கு இராணுவ நடவடிக்கைகளை சில தினங்களில் ஆரம்பிக்கப் போவதாக இராணுவ உயர்பீடம் தகவல் வெளியிட்டிருக்கிறது.

உத்தேச இராணுவ நடவடிக்கைகளுக்காக வடக்கே பத்தாயிரம் துருப்புக்கள் அனுப்பப்பட்டு வருவதாகவும் இராணுவத்துக்கு மேலும் ஆறாயிரம் சிப்பாய்கள் சேர்க்கப்படவுள்ளனர் என்றும் கூடத் தகவல்கள் வந்துள்ளன.

குடாநாட்டின் மீதான தாக்குதலை இனித்தான் ஆரம்பிக்க வேண்டும் என்பதில்லை. வலிகாமம் வடக்கிலும், வலிகாமம் மேற்கிலும் நேற்று விடியும் வேளையில் தாக்குதல்கள் தொடங்கிவிட்டன.

எவர் எதைக் கூறினாலும், தனது தரப்பில் எத்தகைய இழப்பு ஏற்பட்டாலும் தமிழ் மக்களை அழிப்பதென்று அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. விடுதலைப் புலிகள் மீதான பாரிய தாக்குதல் என்பதற்கு மிகப் பெரும் எண்ணிக்கையில் தமிழ் மக்களைக் கொன்றொழிப்பது என்பதே அர்த்தம்.

கடந்த இரண்டேகால் வருடங்களாக இதுவே நடந்து வருகிறது. மக்கள் வாழும் பிரதேசங்களில் எறிகணைவீச்சு, நடத்துவதாலும், விமானக் குண்டு வீசுவதாலும், பீரங்கிக் கப்பல் பீறிடுவதாலும் விடுதலைப் புலிகளா இறக்கிறார்கள்? பொதுமக்களே, சிறு குழந்தைகள், பெண்கள், ஆண்கள், முதியவர்கள், நோயாளர்கள் என்று தமிழ்ப் பொதுமக்களே கொல்லப்படுகிறார்கள். பதினைந்து இருபது பொதுமக்கள் இறக்கும் போது பல சந்தர்ப்பங்களில் ஒரு போராளி கூட விரமரணம் அடைவதில்லை.

ஆனால் இதனைத் தெரிந்து கொள்ளாமல், புரிந்து கொள்ளாமல், தமிழ்ப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கைகளில் விடுதலைப் புலிகளே கொல்லப்படுகிறார்கள் என்று ஸ்ரீலங்கா அரசும் படைகளும் கூறுவதை வெளி உலகம் நம்பிவிடுகிறது!

அரசாங்கம் நடத்தும் யுத்தம் தமிழ்ப் பொதுமக்களுக்கு எதிரானதே என்பதை வெளி உலகம் உணர்ந்து கொள்ள இத்தனை காலம் போதாதா என்ற கேள்வி எழுகிறது. அரசாங்கம் சொல்வதை வெளிநாடுகள் அப்படியே நம்புகின்றனவா அல்லது தமிழ் மக்கள் கொல்லப்படுவது தெரிந்தும் தெரியாதவர்கள் போலப் பாசாங்கு செய்கின்றனவா? துயில் கொள்பவனை எழுப்பிவிடுவது சுலபம். ஆனால் நித்திரை செய்வது போலப் பாசாங்கு செய்பவனை எழுப்புவது கடினம்.

ஓர் அரசு தனது பிரசைகளைக் கொல்வது என்பது ஏற்றுக் கொள்ளமுடியாதது மக்களுக்குப் பாதுகாப்பளிக்க வேண்டிய அரசு அவர்களைக் கொல்வதென்றால் அது அவர்களின் அரசாங்கம் என்று உரிமை கோர முடியாது உரிமைப் போராட்டம் நடத்துகிறார்கள் என்பதற்காகத் தமிழர்களைக் கொல்வதற்கும் அரசுக்கு உரிமை இல்லை.

தமிழ்ப் பொதுமக்களைப் பொறுத்தமட்டில் ஸ்ரீலங்கா அரசாங்கம் அவர்களின் அரசு இல்லை என்பதை தானாகவே நடைமுறையில் காட்டுகிறது.

தனது ஆட்சிக்கு உட்படாத பிற மக்களைக் கொன்றொழிப்பதற்குத் தானும் எந்த நாட்டு அரசாங்கத்துக்கும் உரிமை இல்லை. தமிழ்ப் பகுதிகளில் நடக்கும் அட்டூழியத்தைத் தட்டிக் கேட்பதற்கு, நிறுத்துமாறு கூறுவதற்கு எந்த நாடும் இதுவரை முன்வரவில்லை.

இந்தக் கட்டத்திலாவது தமிழரைக் கொல்வதை நிறுத்துமாறு தெரிவித்து ஸ்ரீலங்காவை நிர்ப்பந்திக்க வெளிநாடு எதற்கும் புத்தி பிறக்குமா என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

## கருத்தரங்கு

இலங்கை செஞ்சிலுவைச் சங்க சரசாலை வடக்கு கிளை ஏற்பாடு செய்துள்ள எய்ட்ஸ் நோய் பற்றிய கருத்தரங்கு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு சரசாலை ஸ்ரீ கணேச வித்தியாலயத்தில் நடைபெறும்.

'தடா' சட்டத்தின் கீழ் காவலில் வைக்கப்பட்டுள்ள

# சுப்புலட்சுமி, ஜெகதீசன், ரவி பிணையில் செல்ல அனுமதி!

## புதுடில்லி உயர் நீதிமன்றம் உத்தரவு

புதுடில்லி, ஆக. 21

ஈ.பி.ஆர்.எல்.எவ் தலைவர் பத்மநாபா மற்றும் 14 பேர் சம்பந்தப்பட்ட கொலை வழக்கில் 'தடா' சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் தி.மு.க. அமைச்சர் சுப்புலட்சுமி, அவரது கணவர் ஜெகதீசன் மற்றும் திரு. வை. ரவிச்சந்திரன் ஆகியோரைப் பிணையில் விடுதலை செய்யும்படி புதுடில்லி உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

இம்மூவரும் 15 ஆயிரம் ரூபா தனிநபர் பிணையும் அதற்கு ஈடான தொகைக்கு இரு நபர் பிணையும் கொடுக்கவேண்டும் என்றும்—

திருமதி சுப்புலட்சுமியும் அவரது கணவரும் அவர்களது சொந்த ஊரான ஈரோட்டிலும்—

திரு. ரவிச்சந்திரன் பாளையங்கோட்டையிலும் தங்கியிருந்து 15 தினங்களுக்கு ஒரு தடவை பொலீஸ் நிலையத்தில் ஆஜராக வேண்டும் என்றும் உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

பிணை அனுமதி வழங்கப்பட்ட வை. ரவிச்சந்திரன், தி.மு.க. பிரமுகரான வை. கோபாலசாமியின் சகோதரர் என்பது குறிப்பிடத்தக்கது. [உ-எ]

## மட்டக்களப்பில் பாதுகாப்பு உஷார்!

கொழும்பு, ஆக. 21

மட்டக்களப்பு நகரில் என்றுமில்லாதவாறு பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப் பட்டு உள்ளன.

நகரினுள் சந்தேகத்துக்கு இடமானவர்கள் நுழைவதைத் தடுப்பதற்காகவே இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

சோதனைச் சாவடிகளில் மேலதிகப் பொலீஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இத்தகவல்களை கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன. [த-எ]

## படையினர் சூட்டுக்கு அளவெட்டி வாசி பலி!

யாழ்ப்பாணம். ஆக. 21

அளவெட்டி வடக்குப் பகுதியில் படையினரின் சூட்டுக்கு இலக்காகி ஒருவர் பலியானார்.

பன்னாலையைச் சேர்ந்த அழகரத்தினம் குணரத்தினம் [35 வயது] என்பவரே பலியானவராவார்.

அளவெட்டி வடக்கு பொன்மலர் ஸ்ரோர்ஸுக்கு முன்பாக இச்சம்பவம் இடம்பெற்றது.

தனது குடும்பத்தினரை பாதுகாப்பான இடத்தில் விட்டு விட்டு தனது வயோதிபரான தந்தையை அழைத்து வரச் சென்ற சமயமே இவர் படையினரின் சூட்டுக்கு இலக்கானார் என்று தெரிவிக்கப் பட்டது.

அதே சமயம் படையினரின் சூட்டுக்கு இலக்கானவர் காயங்களுடன் இராணுவத்திடம் சிக்கி இருக்கலாம் என்று உறவினர்கள் சிலரால் தெரிவிக்கப்பட்டது, ஆனால் இது ஊர்ஜிதம் செய்யப்படவில்லை. [இ-15-3]

## 'அவ்ரோ' குண்டு வீச்சில் பாடசாலை சேதமுற்றது

ஸ்ரீலங்காப் படையினர் நேற்றுக் காலை வலி. வடக்கில் திடீரென ஆரம்பித்த இராணுவ நடவடிக்கைகள் காலை 5.45 மணியளவில் அவ்ரோ விமானத்தின் குண்டு வீச்சுடன் உக்கிரமடைந்தது.

இவவாலை, சேந்தாங்குளம், மாதகல், அளவெட்டி பகுதிகளை நோக்கியே தாக்குதல் நடத்தப்பட்டது.

காலையில் இரு தடவைகள் தாக்குதல் நடத்த வந்த அவ்ரோ விமானம் மொத்தம் 7 குண்டுகளை வீசியது.

இக்குண்டு வீச்சால் அளவெட்டிப் பகுதியில் உள்ள ஒரு பலசரக்கு கடையும், இளவாலை மெய்கண்டான் வித்தியாலயமும் சேதமடைந்தன என்று தெரியவந்தது.

காலையில் இடம்பெற்ற குண்டு வீச்சால் ஏற்பட்ட சேதங்கள் குறித்து மேலதிக தகவல்கள் கிடைக்கவில்லை. [உ-3-15-48-152-13-162]

## உயர்தரப் பரீட்சைகள் வலி. வடக்கில் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஆக. 21

யாழ். குடாநாட்டில் நேற்றுக் காலை ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்ட போதும் ஜி.சி.ஈ. உயர்தர பரீட்சை வலி வடக்குக்கு வெளியே உள்ள இடங்களில் சுமுகமாக நடைபெற்றது. வலி வடக்குப் பகுதியில் இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதால் அப்பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது. அப்பகுதியில் பரீட்சை மண்டபங்களில் மாணவர் வரவு குறைந்து காணப்பட்டது.

இதேவேளை குடா நாட்டின் ஏனைய பகுதிகளில் பரீட்சை வழமைபோல நடைபெற்றதாக யாழ். கல்வி அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன. [உ-5]

## ஊரடங்கு உத்தரவுக்கு கல்விமான்கள் கண்டனம்

யாழ்ப்பாணம், ஆக. 21

யாழ். மாவட்டத்தில் ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சை நடைபெற்று வரும் இவ்வேளையில் ஊரடங்குச் சட்டத்தை அரசு பிரகடனப்படுத்தியிருப்பதற்கு கல்விமான்கள் பலர் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

தற்போது நடைபெற்று வரும் பரீட்சை எதிர்வரும் 25 ஆம் திகதி வரை தொடர்ந்து நடைபெறவுள்ளது.

இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் இம்முறைதான் ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சை நாடு முழுவதும் ஒரே அமர்வில் நடைபெறவிருப்பதாக இப்பரீட்சை ஆரம்பமான போது பரீட்சை ஆணையாளர் தெரிவித்திருந்தார்.

''வடக்கு — கிழக்குப் பகுதிகளில் கடந்த மூன்று ஆண்டுகளாக விசேட பரீட்சைகள் நடத்தப்பட்டன. இனிவரும் காலங்களில் அவ்வாறான சலுகைகளை நிறுத்த முடிவு செய்துள்ளேன்.''— என்று நீதி, உயர் கல்வி அமைச்சர் ஹமீத் கடந்த செவ்வாயன்று நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

[6 ஆம் பக்கம் பார்க்க]

## அருணோதயாக் கல்லூரி பரீட்சை மண்டபம் மாற்றம்

யாழ்ப்பாணம், ஆக. 21

அளவெட்டி அருணோதயா கல்லூரியில் அமைந்திருந்த— ஜி.சி.ஈ. உயர் தரப்பரீட்சை மண்டபம் — நேற்று பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரிக்கு இடம் மாற்றம் செய்யப்பட்டது.

அளவெட்டி வடக்குப் பகுதியில் இராணுவ நடவடிக்கைகள் நேற்றுக் காலை திடீரென ஆரம்பமானதை அடுத்தே பரீட்சை மண்டபம் இடமாற்றம் செய்யப்பட்டதாக யாழ். கல்வி அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

அந்தப் பகுதிகளில் இருந்து பெரும் எண்ணிக்கையான மக்கள் இடம்பெயர்ந்துள்ளதால் மாணவர்கள் பலர் பரீட்சைக்குத் தோற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எதிர்வரும் 25 ஆம் திகதி வரை பரீட்சை தொடர்ந்து நடைபெறவிருப்பது குறிப்பிடத்தக்கது. [உ-5]

### அராலிப் ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னால் அராலி தெற்கு மாவத்தை விளையாட்டு மைதானத்திற்கு வடக்குப் பக்கத்தில் இருந்த சில குடிசை வீடுகள் தீப்பற்றி எரிந்து நாசமாகின.

பிள்ளையார் கோவிலுக்கு வடக்குப் பக்கத்தில் வீடுகளின் மேல் விழுந்து வெடித்த ஷெல்லினால் இரண்டு வீடுகள் கடும் சேதமடைந்தன.

ஷெல் விழுந்த வீட்டின் பதுங்கு குழியில் இருந்த நடராசா மாதினி [வயது 15] என்ற மாணவி ஷெல் துண்டுச் சிதறலினால் தலையில் பலத்த காயம் அடைந்தார்.

அராலி சரஸ்வதி மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்திற்கு அருகே விழுந்து வெடித்த ஷெல்லினால் — அப்பகுதியில் ஒரு இளைஞன் கூட்டிச் சென்ற — வளர்ப்பு நாய் வயிறு பிளந்து, வயிற்றிலிருந்த குட்டிகள் வெளியே தூக்கி வீசப்பட்ட நிலையில் இறந்து கிடந்தது அந்த நாயைக் கூட்டிச் சென்ற இளைஞன் தெய்வாதீனமாக காயங்கள் ஏதுமின்றி உயிர் தப்பினான்.

இத்தாக்குதலினால் பொது மக்களுக்கு பெரும் உடல், உயிர்ச் சேதங்கள் ஏற்படாத போதிலும் பலத்த உடைமைச் சேதம் ஏற்பட்டுள்ளது. ஆங்காங்கே கால்நடைகள் இறந்து கிடக்கக் காணப்பட்டன.

தாக்குதல் சம்பவங்களை அடுத்து அராலிப் பகுதியில் செஞ்சிலுவைச் சங்க அகதி முகாம்களில் தங்கியிருந்த சுமார் அறுநூறு குடும்பத்தினரும் அப்பகுதியில் வசித்து வந்த சுமார் 2 ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பத்தினரும் பாதுகாப்புக் கருதி வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்தனர்.

(உ-12-99-15)

### விடிவு கால.....

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யுகத்துக்குரிய வழிபாட்டு நெறி பக்தி மார்க்கமே ஆகும் களங்கமில்லாத பக்தியினால் நமது நாயன்மார்களும், ஆழ்வார்களும் நமது மொழிக்குத் தந்த அருள் பாசுரங்களே தேவார திருவாசகமும் திவ்வியப் பிரபந்தங்களுமாகும். இந் நூல்கள் நமக்கெல்லாம் தெய்வதரிசனத்தைப் பெறுவதற்கு வழிகாட்டுகின்ற திசை காட்டிகளாக இருக்கின்றன. நம்முடைய மூலப் பொக்கிசங்களாக இருக்கின்ற இத் தெய்வீக நூல்களை நமது சைவத் தமிழர் சமுதாயம் போற்றினால் எங்களுடைய சொந்த மண்ணில் நாம் நிம்மதியாக, மலர்ச்சியாக வாழும் விடிவு காலம் நமக்கு விரைவில் கிடைத்து விடும்.

சிவத்தமிழ் வித்தகர்
சிவ. மகாலிங்கம்
(விரிவுரையாளர், பலாலி ஆசிரியர் கலாசாலை)

## சிறுவன் பலி

யாழ்ப்பாணம் — நல்லூர், கோவில் வீதியில் நேற்று முன் தினம் காலை இடம்பெற்ற லொறி — சைக்கிள் விபத்தில், சைக்கிளில் சென்ற இருவரில் ஒருவர் மரணமானார். காயமடைந்த அவரது சகோதரி யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார்.

யாழ்ப்பாணம், பிரதான வீதியில் தங்கியிருக்கும் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த உருத்திரகுமார் றோகேந்திரகுமார் [12 வயது] என்ற சிறுவனே யாழ் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்குட்படுத்திய போது நேற்று முன்தினம் இரவு 11. 30 மணிக்கு மரணமானார். இவரது சகோதரி உருத்திரகுமார் சித்திரலேகா [14 வயது] யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார். [ஒ-15]

### நேற்றைய ---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

[வயது 25].

இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி அளவெட்டிப்பகுதியில் காயமுற்ற இராசகோபால் நளாயினி [வயது 20], பொன்னுத்துரை மகாலிங்கம் [வயது 47], கந்தவனம் மோகனராஜகுமார் [வயது 22], கந்தையா அரியரத்தினம் [வயது 43], அவரது ஒரு வயது ஆண் குழந்தை அஜித்திரன், கந்தையா கைலாயபிள்ளை [வயது 55], சண்முகானந்தம் [வயது 55] ஆகிய அளவெட்டி வடக்கு வாசிகளும் மற்றும் பொன்னுச்சாமி சத்தியநாதன் [வயது 33 - கும்பிளாவளை], ஜெயராசசிங்கம் நிமலன் [வயது 14 - சிறுவிளான்] யாக்கோப்பு ரஞ்சன் [வயது 22— முன்னாலை], நவரட்ணம் இராசமலர் [வயது 41 - சாத்தான்கலட்டி] ஆகியோருமாவர். [உ-15]

### தற்போது ..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இருக்கும் என்று கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் கூறியுள்ளன.

ஆனால் கண்ணிவெடிகளாலும் விடுதலைப் புலிகள் போராளிகளாலும் சூழப்பட்டுள்ள யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவது அவ்வளவு எளிதல்ல.

மேலும் மன்னார் மாவட்டத்தில் இருந்து போர் விமானங்களை இயக்க இராணுவம் புதிய சிறு விமானத் தளம் ஒன்றை அங்கு அமைத்துள்ளது என்றும் கூறப்படுகிறது.

— இவ்வாறு வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது. [உ-எ]

### 'பூகம்பம்'...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

மீதான இறுதித் தாக்குதலை மேலும் ஒத்திப்போடுவது படையினரின் உறுதியை — மனோநிலை ரீதியாக குலைக்கும் என்பதால் உடனடியாக 'பூகம்பம்' இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகக் கூறப்படுகிறது.

வடக்கில் புதிய வடமாகாண தளபதி மேஜர் ஜெனரல் ஜெரி டி சில்வா தலைமையில் நடைபெறும் முதலாவது பெரிய இராணுவ நடவடிக்கை இது என்பதால், இதன் இறுதி முடிவு எப்படி இருக்கும் என்பது சந்தேகத்துக்குரிய ஒன்றாகவே கணிக்கிடப்படுகின்றது — இப்படி வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது. (உ-எ)

### 200 ஆண்டு.....

[3 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ளத்தை உருக வைக்கிறது ஸ்ரீதேவி, பூமிதேவி பாகனாக எழுந்தருளி வரும் ஸ்ரீ நாகவரத நாராயணரை, அடியார்கள் வந்து தரிசனை செய்து, மனக் கவலை நீங்கி, இஷ்டசித்தி பெறுவார்களாக! இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க! தமிழ் மக்களின் இலட்சியம் — வெற்றியுடன் நிறைவேறுவதாக! — என்று வாழ்த்திப் பிரார்த்திக்கின்றேன். ★

உ

நல்லூர் உற்சவகாலச் சிறப்பம்சம்

## காணலாம் கந்தன் கழல்

ஓசை ஒலியாலே ஊற்றாகும் உள்ளத்தின்
தேசையெலாம் நல்லூரில் தேடலாம் - ஆசையுடன்
ஆணவமும் போகும் அமர்ந்து தியானிக்கக்
காணலாம் கந்தன் கழல்.

- வேலணை வி.சி. இராசரத்தினம்.

Digitized by Noolaham Foundation.

# ஈழ அகதிகளைத் திருப்பி அனுப்ப நீதிமன்றம் இடைக்காலத் தடை!

## நெடுமாறன், ராமதாஸ் ஆகியோர் மனுமீது உத்தரவு

சென்னை, ஆக. 21

இலங்கைத் தமிழ் அகதிகள் தமிழ்நாட்டில் இருந்து அவர்களின் தாயகத்துக்குத் திருப்பி அனுப்புவதற்கு சென்னை உயர்நீதிமன்றம் இம்மாதம் 28 ஆம் திகதிவரை இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

இது தொடர்பாக பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் இராமதாஸ், தமிழர் தேசியக் கட்சித் தலைவர் ப. நெடுமாறன் ஆகியோர் தாக்கல் செய்த மனுக்களை விசாரணைக்கு ஏற்றுக்கொண்ட உயர்நீதிமன்ற நீதிபதி எம். சீனிவாசன் இந்த இடைக்காலத் தடையை விதித்தார்.

இலங்கைத் தமிழ் அகதிகள் கட்டாயப்படுத்தப்பட்டு, கன்னிச்சையாகத் தாயகம் திரும்பச் சம்மதிப்பது போல அவர்களிடமிருந்து கையெழுத்து வாங்கப்படுகிறது என்று தங்களுக்கு தகவல் கிடைத்திருப்பதாக மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

இந்த மனு மீதான விசாரணை இம் மாதம் 27 ஆம் திகதி ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் — ஈழத் தமிழ் அகதிகள் 131 பேர் நேற்று சென்னையில் இருந்து இந்தியன் எயர்லைன்ஸ் விமானம் மூலம் திருகோணமலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். [உ-எ-த]

## வங்கிகளின் கருமபீடங்கள்

யாழ்ப்பாணம், ஆக. 21

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவத்தையொட்டி யாழ். ஆஸ்பத்திரி வீதியில் உள்ள இலங்கை வங்கி, மேற்தரக் கிளையும், வர்த்தக வங்கியும் நல்லூர் ஆலயப் பகுதியில் கருமபீடங்களைத் திறந்துள்ளன.

பொதுமக்களின் நன்மை கருதி அமைக்கப்பட்டுள்ள இக் கருமபீடங்கள் உற்சவகாலம் முடியும்வரை இயங்கும் என்று தெரிவிக்கப்பட்டது. [இ]

## யாழ். கல்வி அலுவலகத்தில் தமிழ் மொழி புறக்கணிப்பு!

யாழ்ப்பாணம் கல்விப் பகுதியில் இருந்து, தமிழல்லாத மொழியில் தமக்குக் கிடைத்த கடிதத்தை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் திருப்பி அனுப்பி வைத்துள்ளார்.

தமிழில் அனுப்பி வைக்கப்பட்ட கடிதம் ஒன்றுக்குக் கல்விப் பணிப்பாளரிடமிருந்து தமிழல்லாத மொழியில் பதில் கிடைத்ததாகவும் அதனை ஆட்சேபித்தும் கண்டித்துமே தாம் அதனைப் பதிவுத் தபாலில் திருப்பி அனுப்பியதாகப் பொதுச் செயலாளர் திரு. த. மாசிலம் தெரிவித்தார்.

தமிழ் மொழிக்குப் பெருமையூட்டும் யாழ்ப்பாணத்திலேயே தமிழ்மொழி இவ்வளவு தூரம் புறக்கணிக்கப்பட்டுள்ளமை பொறுக்க முடியாதது என்றும் —

தமிழல்லாத மொழியில் கடிதங்கள் அனுப்பப்பட்டபோக முன்னரும் பல தடவைகள் சுட்டிக் காட்டப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். [அ]

## தந்தைக்கு சூடு! மகளை நாய் கடித்துக் குதறியது

யாழ்ப்பாணம், ஆக. 21

படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி தந்தையார் கீழே விழுந்ததைக் கண்டு ஓடிய அவரது 12 வயது மகள் நாயினால் கடியுண்டார்.

இப்பரிதாபச் சம்பவம் நேற்று அளவெட்டியில் நிகழ்ந்தது.

சூடுபட்ட கைலாசபிள்ளை என்பவரின் மகளான ஹம்சாந்தி என்பவரே நாயினால் கடியுண்டு காயங்களுடன் யாழ் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சிறுமி ஓடிய சமயம் துரத்திச் சென்ற நாய் சிறுமியை உருட்டி உருட்டிக் கடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது. [இ 15]

## குடாநாட்டில் பரவலாக நேற்று படையினர் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஆக. 21

குடாநாட்டில் உள்ள ஸ்ரீலங்காப் படை முகாம்களில் இருந்து நேற்று குடியிருப்புப் பகுதிகள் மீது பரவலாக தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

காரைநகர், வேலணை, மண்டைதீவு, பலாலி, பூநகரி, கல்முனை, ஆனையிறவு ஆகிய அனைத்து முகாம்களில் இருந்தும் கடற் பிராந்தியங்களில் இருந்தும் நேற்று ஷெல், பீரங்கித் தாக்குதல்கள் மற்றும் துப்பாக்கிப் பிரயோகங்கள் நடத்தப்பட்டன.

நேற்றுக் காலை 5 30 மணியளவில் எல்லாப் படை முகாம்களில் இருந்தும் ஏககாலத்தில் தாக்குதல்கள் இடம்பெற்றன என்பது எமது செய்தியாளர்களின் தகவல்களில் இருந்து தெரிய வந்துள்ளது. [ஒ-15 51-117]

## அளவெட்டிப் பகுதியில் பொதுமக்கள் சிக்கினர்?

யாழ்ப்பாணம் ஆக. 21

அளவெட்டிப் பகுதியில் பல பொதுமக்கள் படையினரிடம் சிக்கியிருப்பதாக அஞ்சப்படுகிறது.

படையினரைக் கண்டதும் பொதுமக்கள் ஓட முயன்றதாகவும், அவர்கள் மீதும் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் தெரியவந்தது.

படையினரிடம் சிக்கியவர்களில் சிலர் ஒருவாறு தப்பி, அவர்களின் பிடியிலிருந்து விடுபட்டு வந்தனர்.

அவர்கள் தெரிவித்த தகவல்களின்படி, படையினர் பெரும்பாலும் குடியிருப்புப் பகுதிகளில் இருந்த இளம் வயதினரையே பிடித்து தடுத்து வைத்துள்ளனர் எனத் தெரியவந்தது. (உ-3-15)

## குருநகரில் நேற்று மாலை ஷெல் வீச்சில் வீடு சேதம்

யாழ்ப்பாணம், ஆக. 21

குருநகர் ஆறாம் குறுக்குத் தெருவில் நேற்று மாலை 5.15 மணியளவில் விழுந்து வெடித்த ஷெல்லினால் வீடு ஒன்று சேதமடைந்தது.

வீட்டில் இருந்தவர்கள் மயிரிழையில் உயிராபத்தின்றி தப்பிக் கொண்டனர்.

இதேவேளை, பூநகரி - கல்முனைப் பகுதியில் இருந்து நேற்று மாலை 5 மணியளவில் ஏவப்பட்ட ஷெல்கள் குருநகர், பாஷையூர் பகுதிகளில் விழுந்து வெடித்தன என்றும் தெரிவிக்கப்பட்டது. [ஒ]

## இரட்டை..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யையும் சம காலத்தில் செய்து பிரச்சினையைத் தீர்க்கமுடியும் என்று கருதுகிறீர்களா எனக் கேட்டதற்கு—

அது சாத்தியமானதே என்று திரு வீரக்கோன் பதிலளித்தார். [அ]

## வலி - வடக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சண்டை தொடர்ந்த வண்ணம் இருந்தது,

பல்லாயிரக் கணக்கான படைகள் முன்னேறும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதாகவும்—

எனினும் அரச துருப்புகளுக்கு புலிகளினால் கடும் எதிர்ப்பு ஏற்பட்டிருப்பதாகவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்ததாக பி.பி.ஸி. நேற்றிரவு அறிவித்தது.

இரு தரப்பிலும் ஏற்பட்ட சேதவிவரங்கள் குறித்து விவரமான தகவல்கள் ஏதும் கிடைக்கவில்லை.

எனினும் நாள் முழுவதும் படையினர் நடத்திய ஷெல் தாக்குதல்களினாலும், முன்னேற முயலும் பகுதிகளில் படையினர் நடத்திய ஐம்பது கலிபர் வேட்டுகளினாலும் பொதுமக்களின் உடைமைகளுக்கு பெரும் சேதம் ஏற்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

படையினர் தாம் முன்னேற முயற்சிக்கும் பகுதிகளை நோக்கி கண்டபடி ஷெல் தாக்குதல்களை நடத்திய வண்ணம் இருந்தனர்.

இதேசமயம் —

நேற்று மாலை மாதகல், இளவாலை, விளான், அளவெட்டி, தெல்லிப்பழை மல்லாகம், சந்தரோடை போன்ற பகுதிகளின் மீது ஹெலிகொப்டர்கள், சீ பிளேன்கள் ஆகியன பறந்த வண்ணம் நோட்டமிட்டுக்கொண்டிருந்தன

[உ-ஒ 3-5-13-15-48-68-28-152-154 162]

## பெருமளவு..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெரும்பாலான மக்கள் திடீர் இராணுவ நடவடிக்கைகளை அடுத்து தமது வீட்டில் பொருள்கள், உடைமைகள் ஆகியவை போட்டது போட்டபடி இருக்க, உடுக்க மாற்றுடையின்றி அகதிகளாக காலை வேளையிலேயே வெளியேறி வந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

குழந்தைகளைக் கையில் தாங்கியபடியும், வயோதிபர்களை வகைத்தாங்கலாக பிடித்துக்கொண்டும் மக்கள் வெளியேறியதைக் காணமுடிந்தது. பலர் கால்நடைகளையும் தங்களுடன் கொண்டு வந்தனர்.

வலி வடக்கில் பெருமளவு பரப்பில் மேற்கொள்ளப்பட்ட புகையிலை, வெங்காயச் செய்கை ... வெளியேறியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

[உ-3-13-15-68-152-162]

## ஈழத் தமிழ் இளைஞர் கரூரில் கைதானார்

சென்னை, ஆக. 21

தமிழகம் - கரூரில் வேலாயுதம்பாளையம் என்னுமிடத்தில் ஈழத் தமிழ் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

பொலீஸார் அங்கு நடத்திய சுற்றிவளைப்புத் தேடுதலின் போது அவர் "தடா" சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார் என்றும் —

கைது செய்யப்பட்ட பிரஸ்தாப இளைஞர் தற்போது தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் வரதன் என்பவரின் நெருங்கிய சகா என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ 5)

## இந்திய இலங்கை ஒப்பந்தம் இன்னும் அமுலில் உள்ளதாம்!

### குஜ்ரால் சொல்கிறார்

புதுடில்லி, ஆக. 21

1987 இல் கைச்சாத்திடப்பட்ட இலங்கை—இந்திய ஒப்பந்தம் செல்லுபடியானது; அது இன்னமும் அமுலில் உள்ளது

முன்னாள் இந்திய வெளியுறவு அமைச்சர் ஐ கே குஜ்ரால் முன்கண்டவாறு தெரிவித்தார்.

திரு. குஜ்ரால் மேலும் சொன்னதாவது;

இலங்கையின் சொந்தப் பிரச்சினைகளுக்கு இலங்கையே தீர்வு காணவேண்டும். இலங்கை — இந்திய ஒப்பந்தத்தில் எவரையாவது குழப்பும் எந்த ஒரு விடயத்தையும் இரு நாடுகளுக்கும் இடையேயான நட்புரீதியிலான பேச்சுவார்த்தை மூலமே தீர்க்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார். (த-எ)

## நாராயணன் இன்று பதவி ஏற்பு

புதுடில்லி, ஆக. 21

இந்தியாவின் உபஜனாதிபதியாக திரு. கே. ஆர். நாராயணன் இன்று பதவியேற்கிறார்.

இவருக்கு ஜனாதிபதி டாக்டர் சங்கர் தயாள் சர்மா ஜனாதிபதி மாளிகையில் பதவிப் பிரமாணம் செய்து வைப்பார். [இ-எ]

## ஊரடங்கு...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிலையில் — பரீட்சை சுமுகமாக நடைபெற்று வரும் வேளையில் - நேற்று முன்தினம் இராணுவம் அறிவித்த ஊரடங்கு உத்தரவும். தொடரும் இராணுவ நடவடிக்கைகளும் எதைக்காட்டுகின்றன? பரீட்சை குழம்பிப் போவதற்கு காரணமாயிருப்பவர்கள் யார்?— என்ற கேள்வி எழும்பியிருக்கின்றன.

—இப்படிக் கல்விமான்கள் சிலர் நேற்றுக் கருத்துத் தெரிவித்தனர். (உ-5)

## மறியல் போராட்டம்

யாழ்ப்பாணம், ஆக. 21

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் நாளேடு ஒன்றைச் சேர்ந்த பணியாளர்கள் நேற்றுக் கடமைக்குச் செல்லாமல் மறியல் போராட்டம் நடத்தினர்.

நிர்வாகம் சம்பந்தமாகப் பல குற்றங்களைச் சுமத்தியே இந்த மறியல் போராட்டம் நடத்தப்பட்டது

பணியாளர்கள் பின்னர் கோண்டாவிலில் உள்ள விடுதலைப் புலிகள் தலைமையகத்துக்கும் சென்று முறைப்பாடு செய்தனர். அவர்கள் சுலோக அட்டைகளையும் பிடித்தனர்.

பத்திரிகை அலுவலகத்திற்கு வெளியே தமிழீழ காவல்துறையினர் சேவையில் ஈடுபட்டிருந்தனர். [அ-5]

# மரண அறிவித்தல்கள்

## மதியாபரணம் சரஸ்வதி

காரைநகர் புதுறோட்டைச் சேர்ந்தவரும், தற்போது மாவடியில் வசித்து வந்தவருமாகிய மதியாபரணம் சரஸ்வதி நேற்று (20 - 08 - 92) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் மதியாபரணத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற மில்றி சந்தையா வின் மைத்துனியும், துரைராஜசிங்கம், பகவத்சிங்கம், பராசக்தி சிவசக்தி, ஆகியோரின் சிறிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் தகனக் கிரியைகள் இன்று (21-08-92) வழுக்கையாறு மயானத்தில் காலை 10 00 மணிக்கு நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. பகவத்சிங்கம் (பெறாமகன்)

கார்த்திகேசு வித்தியாலய வீதி,
மூளாய் தெரு,
மாவடி.

[22242]

## சரஸ்வதி சோமசுந்தரம்

(ஓய்வுபெற்ற ஆசிரியை நாவலர் ம. வி யாழ்ப்பாணம்)

திருமதி சரஸ்வதி சோமசுந்தரம் அவர்கள் 20-8-92 அன்று காலமானார். அன்னார் யாழ் இந்துக் கல்லூரி ஆசிரியர் சிவனருட்செல்வன் சி. செ. சோமசுந்தரம் அவர்களின் அன்பு மனைவியும் நிரஞ்சன் நந்தகோபன் (கணக்காளர் மாணவன், கொழும்பு), மதன சொரூபி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன்னாள் மாணவி), ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் 20-8-92 பி. ப. 4 மணிக்கு கோம்பயன் மணல் மயானத்தில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. செ. சோமசுந்தரம் (கணவன்)

411, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
(கி/3072)

## செல்வன் உ. றஸ்கின் றோகேந்திரகுமார்

(மாணவன் புனித பத்திரிசியார் கல்லூரி)

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த செல்வன் உ. றஸ்கின் றோகேந்திரகுமார் 19-8-92 அகால மரணமானார். இவர் திரு S. T உருத்திரகுமாரன் திருமதி மடுமலர் உருத்திரகுமாரன் (ஆசிரியர், புனித பத்திரிசியார் கல்லூரி) ஆகியோரின் அன்புப் புதல்வனும் சித்திரலேகா, ராஜேந்திரக்குமார், றுபேந்திரக்குமார், வினித்திரலேகா, ரவீந்திரகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற திரு துரையப்பா திருமதி துரையப்பா, திரு. சா. மார்சலீன்பிள்ளை (செல்வராஜ மாஸ்டர்), காலஞ்சென்ற திருமதி மரியமுத்து மார்சலீன்பிள்ளை ஆகியோரின் அன்புப் பேரனும், சுபேந்திரனின் அன்பு மருமகனும், லூட்ஸ்மலர் (ஆசிரியை வல்வை சிதம்பராக் கல்லூரி), திரு. நா. யோகேஸ்வரராசா, திருமதி அமலேஸ்வரி யோகேஸ்வரராசா (ஆசிரியை வல்வை மகளிர் மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புப் பெறாமகனுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் 22-8 92 சனிக்கிழமை காலை 9 30 மணிக்கு புனித பத்திரிசியார் கல்லூரி சிற்றாலயத்தில் திருப்பலியின் பின் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
"தாய்"

136, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

[22252]

## MRS C. G. KANAGASUNDARAM

தெல்லிப்பழை 'Barr Lane' இல் வசித்த திருமதி கரலின் ஞானபூரணம் கனகசுந்தரம் 19-08-92 இல் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். இவர் காலஞ்சென்ற திரு. டற்றன் கனகசுந்தரத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற Dr Charles, Dr Richard New Zealand) ஆகியோரின் அன்புத் தாயாரும், சுகுணம் இராஜமல்லிகை ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை உடுவிலில் நேற்று (20-08-92) மாலை 4மணிக்கு நடைபெற்றது.

தகவல்:
திருமதி C. S. அழகக்கோன்

152, Dutch Road,
Uduvil.

(22251)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 33/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 21-08-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org